கிராமத்திற்கு இடையிலே, பெரும் ஆறோ, வாய்க்கால்களோ இருந்து, கிராமத்திற்குச் செல்ல முடியாத நிலையிருந்தால், அந்தக் கிராமத்தை சேர்ந்தவர்கள் சைக்கிள் கொண்டு வந்து குறிப்பிட்ட இடத்திலிருந்து இந்தச் சோற்றுப் பாத்திரங்களையெல்லாம் வாங்கிப் போகிற ஏற்பாடு இருக்கிறது. எந்தப் பள்ளிக்கூடமும் இந்தப் பலனைப் பெறாமல் இல்லை.

திரு. எம். தேவராசன் : இந்தத் திட்டம் சமவெளிப் பகுதிகளை முடித்துக்கொண்டு, மலை ஏறி, நீலகிரி மலைக்கு வர எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஜோசியம் சொல்வதற்கில்லை. தானமாகக் கிடைக்கிற மாட்டைப் பல்லைப் பிடித்து பார்க்கக் கூடாது என்பது பழமொழி. கேர் நிறுவனத்தின் உதவியைப் பொறுத்து நடைபெறுகிறது. கேர் நிறுவனத்தின் உதவி 30 சமையற் கூடங்கள் என்பதற்குப் பதிலாக 60 சமையற்கூடங்கள், 100 சமையற் கூடங்கள் என்ற அளவுக்கு கிடைக்குமானால், அவர்கள் எடுத்துக்கொள்கிற சூழ்நிலை உருவானால், விரிவாகக் கூட இந்தத் திட்டம் வரும்.

Pensionary benefits for employees of Local Bodies

*** 494 Q.—Dr. H. V. HANDE :** Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to introduce pension and gratuity scheme to the employees of the Panchayats and Panchayat Unions; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சி நகரியங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியப் பயன் களை அளிப்பதற்கான திட்டத்தை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இத்திட்டம் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்த பஞ்சாயத்து ஊழியர்களுக்கு சம்பள விகிதங்களை கூட்டியதன் காரணமாக, பஞ்சாயத்து நிதி நிலை இடம் கொடுக்காத காரணத்தால், மிகவும் சிரமப்படுகிறதே, இந்நிலையில் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்ற விதிமுறையை அரசாங்கம் ஏற்படுத்துமானால், எந்த ஒரு நகராட்சி மன்றமும் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து செலுத்த முடியாது. ஆகவே, ஓய்வூதியத்தை அரசே பொறுப்பேற்றுக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த நிலைமை பற்றியெல்லாம் ஆராய்ந்துதான் கொள்கை அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த ஊராட்சி மன்றங்கள் $8\frac{1}{2}$ சதவிகிதம் அவர்கள் பங்காகத் தரவேண்டும். ஒவ்வொரு பணியாளரும் $6\frac{1}{4}$ சத விகிதம் தரவேண்டுமென்ற அளவிலே, இதன் மூலம் 12 ஆயிரத்து சில்லறை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேலும் ரூ. 11 லட்சம் செலவாகும் என்ற முறையில் மேற்படி திட்டத்தை ஆராய்ந்து அதை செயல்படுத்துவதற்கான ஏஜென்சி குறித்து, உள்ளாட்சி நிதிக் கணக்காயர் ஆராய்ந்து ஆலோசித்து, வரைவுத் திட்டங்களைத் தயாரித்து அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கவேண்டுமாய், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்பி வைத்த பிறகு, அதனைப் பெற்ற பிறகு, திட்டவட்டமாக முடிவு எடுக்கப்படும். ஆனால் கொள்கை அளவிலே அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : முன்னாள் மாவட்ட மன்றத்தில் பணியாற்றி, தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற ஆணையர்கள், நிர்வாகிகள் போன்றவர்களுக்கு ஓய்வூதியங்கள் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படாமலும், அவர்களுடைய பணிக்காலத்திற்கான விதிமுறைகளும் திருத்தப்படாமலும் உள்ளன என்று கூறுகிறார்கள். அவற்றைத் திருத்த விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதற்கான சில விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி வரன்முறைப்படுத்துகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த விஷயம் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அது எவ்வளவு நாளைக்குள் செயலுக்கு வரும்? அது செயலுக்கு வருகின்றபொழுது எந்த நாளிலிருந்து ஓய்வூதியம் அளிக்கப்படும் என்ற விவரத்தை கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுதுதான் நகராட்சி மன்றத்தைப் பொறுத்த ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை அளிக்கின்ற முயற்சியை மேற்கொண்டோம். மாண்புமிகு உறுப்பினர் கூறிய மாதிரி, சம்பளத்தையே தாங்கிக் கொள்ள முடியவில்லையென்று கூறும்போது, ஓய்வூதியம் அளிப்பதையும் தாங்கிக்கொள்ளுமா என்பதைப் பார்க்கவேண்டும். இப்பொழுது கொடுப்பதற்கே தாங்க முடியாது என்று சொல்லும்போது, 4 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து தரவேண்டுமென்று சொன்னால், எந்த அளவுக்குத் தாங்குவார்கள் என்று காண வேண்டும். ஆகவே, எந்த ஏஜென்ஸி போன்ற வரைவுத் திட்டங்களை அனுப்பி வைக்கவேண்டுமென்று கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்கப்பட்டிருக்கிறார். அவர் அறிக்கை தந்ததற்குப் பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.